**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.12/2020**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதா | மதம் | : இந்து |
| க/பெ | : வெங்கடேசன் | ஜாதி | : -- |
| வயது | : 42 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : நெசவு | வட்டம் | : திருத்தணி |

**20.03.2025**
**பி.வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 01.05.1963ம் தேதியிட்டு ஆயிலு ஏகாம்பர முதலி அவர்கள் உண்ணாமலை அம்மாளுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் மற்றும் அதன் தமிழ்மொழிபெயர்ப்பு தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 14.03.2020ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதி திருத்தணி வட்டாட்சியருக்கு கொடுத்த மனு கைநகல் தாக்கல் செய்கிறேன். **(மனு பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 16.03.2020 அஞ்சல் ரசீதுகள் தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ரசீதுகள் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருத்தணி வருவாய் கோட்ட அலுவலர் 13.06.2020ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலுவலர் 20.10.2020ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)